மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

அசல் வழக்கு எண். 311/2021

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.கலைச்செல்வி, கிரேடு III என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : குழந்தை ஆனந்தம் (வா.சா.1)<br>த/பெ.க/பெ :<br>கிராமம் :<br>தாலுகா : | சாதி :<br>மதம் :<br>தொழில் :<br>வயது : |

18.10.2023

வாதி தரப்பு சாட்சி 1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி 2முதல் 5 வரையான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –

1. எனக்கு பூர்விகம் திருச்சுழி ஆகும். எங்களுடைய கணபதி பண்டாரம், அறியநாயக பண்டாரம் அப்பா பெயர் குருசாமி பண்டாரம் ஆகும். குருசாமி பண்டாரத்திற்கு கணபதி பண்டாரமும், அறியநாயக பண்டாரமும் சகோதரர்கள். கணபதி பண்டாரத்திற்கு வாரிசுகள் குருசாமி, வாதி ஆகும். அறியநாயக பண்டாரத்திற்கு மாரிமுத்து பண்டாரம் வாரிசு ஆவார். மாரிமுத்து பண்டாரத்தின் வாரிசுகள் தான் பிரதிவாதிகள் என்றால் சரிதான். அறியநாயக பண்டாரம் ஆசிரியராக பணியாற்றி வந்தார். கணபதி பண்டாரம் வைத்தியராக பணியாற்றி வந்தார். கணபதி பண்டாரம் பள்ளிமடம் கிராமத்தில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். இடம் வாங்கி தோப்பு வைத்திருந்தார். அறியநாயக பண்டாரம் தாவா சொத்தில் குடியிருந்து வந்தார் என்றால் நாங்களும் குடியிருந்தோம் அவரும் குடியிருந்தார். பள்ளிமடத்தில் குடியிருக்கும்போது நானும் தனி குடித்தனம் , அறியநாயக பண்டாரமும் , தனிக்குடித்தனமாக குடியிருந்து வந்தோம் என்றால் சரிதான்.

2. தாவா சொத்து சர்வே எண்.555/பி ஆகும். தாவா சொத்து எந்த வருடம் யாரிடமிருந்து யார் வாங்கினார்கள் என்றால் அறியநாயகம் அவர் பெயருக்கு 1917ம் வருடம் கிரையம் பெற்றார். அதற்கு எனது அப்பா பர்மாவில் இருந்து

பணம் அனுப்பினார். எனது பிராதில் மேற்படி சங்கதிகளை சொல்லி உள்ளேன். எனது பிராதில் எனது அப்பா பர்மாவில் இருந்ததாகசொல்லவில்லை என்றால் சரியல்ல. அறியநாயக பண்டாரமும், கணபதி பண்டாரமும் கூட்டு குடும்பாக வாழ்ந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் விஸ்தீரணம் 18 X 36 ஆகும். அதன் சதுர மீட்டர் எனக்கு தெரியாது. தாவா சொத்து அறியநாயக பண்டாரம் சுயமாக கிரையம் வாங்கினார் என்றாலும் நான் சொல்வதுபோல் எனது அப்பாவுக்கும் கணபதி பண்டாரத்திற்கும் தாவா சொத்து சம்பந்தமில்லை என்றால் தாவா சொத்தைபொறுத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அறியநாயக பண்டாரம் மகன் மாரிமுத்து பெயரில் ஏற்கனவே பட்டா எண் 116 ல் உள்ளது என்றால் சரியல்ல. அறியநாயக பண்டாரம் மகன் மாரிமுத்து பெயரில் உள்ள பட்டா 161 சதுர மீட்டர் என்றால் மொத்தம் 2 இடமும் சேர்த்து 161 சதுரமீட்டர் ஆகும். தாவா சொத்தில் ஆஸ்பட்டாஸ் போட்டு சுற்றுசுவர் எழுப்பப்பட்ட காலி இடம் என்றால் சரிதான். பிராதில் சொல்லி உள்ளவாறு அந்த இடத்தில் காரை வீடு கட்டி குடியிருந்து வருகிறோம் என்று சொல்லி இருந்தால் அது தவறு என்றால் மாண்புமிகு உயர் நீதிமன்ற தீர்ப்பிற்கு பிறகு கட்டியிள்ளோம்.

3. ஆஸ்பட்டாடஸ் சீட் பிரதிவாதிகள் போட்டு அவர்களது அனுபவத்தில் இருந்தது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)